IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**STC No. 581/2017**

**Pw**1 – மகேஸ்வரன் த/பெ. ராமலிங்கம்

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 18.05.2026.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரி எனக்கு நண்பரா என்றால் ஆமாம். யார் மூலமாக எனக்கு எதிரி நண்பரான என்றால் நாங்கள் இருவரும் ஒரே சேர்ந்தவர்கள் அதனால் எனக்கு பழக்கம். என்னுடைய முகவரி எனக்கு இரண்டு வீடுகள் உள்ளது 50, அருணகிரி நாதர் வீதி, சென்னிமலை மற்றொரு முகவரி 25, பசுவப்பட்டி, சென்னிமலை. எதிரிக்கும் , எனக்கும் ஏற்கனவே வரவு செலவு இருந்ததா என்றால் ஆமாம். எதிரி கடன் வாங்கியதாக சொல்லி உள்ளேன் எந்த தேதியில் கடன் வாங்கினார் என்றால் 08.03.2016 ம் தேதி கடன் வாங்கினார் எங்கு வைத்து கடன் வாங்கினார் என்றால் எதிரி சென்னிமலை அருகில் உள்ள உலக புரத்தில் கோழி பண்ணை வைத்துள்ளார் அங்கு வைத்து கடனை பெற்றுக் கொண்டார். எதிரியின் கோழிப்பண்ணை முகவரி சொல்ல முடியுமா என்றால் உலகபுரத்தில் உள்ள கோழிப்பண்ணை என்றுதான் சொல்லுவோம்.

2. யார் முன்னிலையில் கடன் கொடுத்தேன் என்றால் கடன் கொடுக்கும் பொழுது எதிரி மட்டும் தான் இருந்தார். எதிரி என்ன தேவைக்காக கடன் வாங்கினார் என்றால் பொதுப்பணித்துறையில் ஒப்பந்தம் எடுத்து பணிகளை செய்து கொண்டு இருந்தார் அதற்காக வாங்கினார். பொதுப்பணி துறையில் ஒப்பந்த பணிகளை செய்ததாக சொல்லி உள்ளேன் அதற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை அவர் பணிகள் செய்து வந்த இடத்தை காண்பித்தார். எதிரிக்கு பணத்தை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரூ 8,50,000 த்தை ரொக்கமாக கொடுத்தேன். ஏற்கனவே

நாங்கள் செய்து வந்த வரவு செலவுக்கு ஆவணம் எதுவும் வாங்கி வைத்திருந்தேனா என்றால் ஆமாம். காசோலை, புரோநோட் மற்றும் ரூ.20 , ரூ. 100 முத்திரைத்தாளில் எழுதிக் கொடுப்பார். அது தவிர வேறு ஆவணங்கள் வாங்கினேனா என்றால் இல்லை.

3. வட்டி எதுவும் வாங்கினேனா என்றால் ஆமாம் அதை என்னுடைய வழக்கு சங்கதிகளில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. பணத்தை வாங்குவதற்கும் திருப்பிக் கொடுப்பதற்கும் ரசீது கொடுப்பேனா என்றால் ஆமாம். நான் வாங்கிய ஆவணங்களையும் திருப்பி கொடுத்துவிடுவேன். ரூ 8,50,000 வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சுத்திகரிப்பு நீர் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறேன். ரூ 8,50,000 கொடுக்கும் அளவுக்கு வசதி இருந்தது என்பதை நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். காசோலையை யார் எழுதிக் கொடுத்தது என்றால் எதிரி தான் நிரப்பி கொடுத்தார். எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றால் 6 வது மாதம் 2017 ம் ஆண்டு கொடுத்தார். கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கும், காசோலை பெற்ற தேதிக்கும் இடைப்பட்ட காலத்திற்கு என்ன காரணம் என்றால் எதிரி காலதாமதம் செய்து வந்தார்.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை